# “புதிய அவதாரத்தில் குலக்கல்வி” கடுமையாக எதிர்க்க வேண்டும்!

## தமிழ்நாடு அரசுக்கு கி.வீரமணி வலியுறுத்தல்!



சென்னை, ஆக. 21-

“குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்கத் திட்டமிட்டுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘விஸ்வகர்மா’ திட்டத்தை அனைத்துக் கட்சிகளையும் ஒன்று திரட்டி முதல்வர் கடுமையாக எதிர்க்க வேண்டும்” என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள் ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், “சனாதன தர்மத்தை, சாதியை காப்பாற்றி நிலைக்க வைக்கும் தத்துவத்தைப் பாதுகாப்பதே கடந்த 9 ஆண்டுகளாக நடந்துவரும் பா.ஜ.க. ஆட்சியின் செயல்பாடாகும். உயர்ந்தவன் தாழ்ந்தவன்; தொடக்கூடியவன் தொடக்கூடாதவன் என்று மனி தர்களை வேற்றுமைப் படுத்தி, அடிமைப்படுத்திய குலதர்மப் பாம்பு, பிரதமர் மோடிஆட்சியில் திடீரெனப் படமெடுத்தாடி அதன் நச்சுப் பல்லை நீட்டிக் காட்டுகிறது. “விஸ்வகர்மா திட்டம்'' என்பதின்படி ஒரு புதிய குலதர்மத் தொழிலைப் புதுப்பித்து, ஒடுக்கப்பட்ட மக்கள்மீது சுமத்தப்பட்ட அந்தப் பிறவி இழிவை மறைமுகமாகப் புதுப்பித்து, அந்த “கீழ்சாதியர் அவரவர் குலத் தொழிலை கிராமங்களிலும், நக ரங்களிலும் 30 லட்சம் பேர் செய்வார்கள் அதற்கு நிதி, மானியம் உதவி உண்டு என்று ஆகஸ்ட் 15 ஆம் நாளில் டெல்லி செங்கோட்டை உரை யில் பேசியுள்ளார் பிரதமர் மோடி.

‘பி.எம். விஸ்வகர்மா'' திட்டம் என்பதை அமைச்சரவையின் பொரு ளாதார குழு ஏற்று ரூ.13,000 கோடி ஒதுக்கியுள்ளது. பள்ளிக்கூடங்களுக்குப் பதிலாக குரு சிஷ்ய பரம்பரைக் கல்விப் பயிற்சியாம். 2023-2024 முதல் 2027-2028 வரை இத்திட்டப்படி குலத் தொழிலை செய்ய அவரது வாரிசுகளுக்கு, குடும் பத்தினருக்கு கற்றுக் கொடுப்பார் களாம். அதற்கு இந்த 13,000 கோடி ரூபாயாம்.18 பாரம்பரிய குலத் தொழிலை அடையாளம் கண்டுள்ளார்களாம்.

தச்சுத் தொழில், படகு செய்தல், கருமான் பட்டறைத் தொழில், குய வன் மண்பாண்டத் தொழில், சுத்தி முதல் துடைப்பம் விளக்குமாறு கட்டும் தொழில் (Broom Maker), பொம்மை செய்தல், சிகை திருத்தும் தொழில்(Barber), கைத்தறித் தொழில், பூக் கட்டும் தொழில், சலவைத் தொழில், தையல் தொழில், மீன் பிடித் தொழில் முதலியன இத்திட்டத்தில் வருகிறதாம். இதனைச் செய்யப் பழகுவோருக்கு ஒரு லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரை மானிய அடிப்படையில் கடன் அளிப்பார்களாம்.தூண்டில் எவ்வளவு லாவகமாக அமைக்கப்பட்டிருக்கிறது பார்த்தீர்களா? இளைஞர்களே, நீங்கள் உங்கள் குலத்தொழிலைச் செய்தாக வேண்டும் என்றால், நிரந்தர இழிவும், அடிமைத்தனமும்தான் இந்த பா.ஜ.க. ஆட்சியில் உங்களுக்குக் கிட்டும்,

சமத்துவ சமுதாயம் காண விரும்பும் அனைவரும் ஒன்றுபட்டு உடனடியாக ஓர் அணியில் திரண்டு எழுந்து எதிர்ப்புக் கடலாய்ப் பொங்கி எதிர்த்து இத்திட்டத்தை கருவிலேயே அழித்து, குலத்தொழில் பாதகத்தை ஒழித்துக் கட்ட வேண்டும். தமிழகம் இத்திட்டத்துக்கு ஒருபோதும் இசைவு தராது; கடுமையாக எதிர்க்கும் என்பதைப் பிரகடனப்படுத்துவதும் அவசர, அவசியம்” என்றும் வீரமணி அவர்கள் கூறியுள்ளார்.

# ம.பி. பா.ஜ. ஆட்சியில் ரூ.2.70 லட்சம் கோடி ஊழல்!

## 18 ஆண்டு பட்டியலை வெளியிட்டது காங்கிரஸ்

போபால், ஆக.21-

மபி பா.ஜ ஆட்சியில் கடந்த 18 ஆண்டுகளில் ரூ.2.70 லட்சம் கோடி ஊழல் நடந்ததாக கூறி காங்கிரஸ் கட்சி பட்டியல் வெளியிட்டுள்ளது. மத்திய பிரதேச மாநிலத்தில் பா.ஜ ஆட்சி நடக்கிறது. அங்கு முதல்வராக சிவராஜ்சிங் சவுகான் உள்ளார். இந்த ஆண்டு இறுதியில் அங்கு சட்டப்பேரவை தேர்தல் நடக்கிறது. தேர்தல் தேதி அறிவிக்கும் முன்னரே பா.ஜ சார்பில் போட்டியிடும் 39 பேர் கொண்ட முதல் பட்டியல் வெளியானது. இந்த நிலையில் கடந்த 18 ஆண்டுகளாக பா.ஜ மத்தியபிரதேச மாநிலத்தில் ரூ.2.70 லட்சம் கோடி ஊழல் செய்துள்ளதாக காங்கிரஸ் கட்சி பட்டியலிட்டுள்ளது. இதுதொடர்பாக மபி காங்கிரஸ் தலைவர் கமல்நாத் கூறியதாவது:

மத்தியப் பிரதேசத்தில் கடந்த 18 ஆண்டுகளில் பாஜ ஆட்சியில் மெகா ஊழல்கள் நடந்துள்ளன. கூகுளில் ‘ஸ்கேம்’ என்று தேடினால், முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் படம் தான் வரும் அளவுக்கு ஊழல் மலிந்துள்ளது. மத்திய பிரதேசத்தில் உள்ள சிவராஜ் சிங் சவுகான் அரசு, அதன் 18 ஆண்டு கால ஆட்சியில் மோசடிகளில் உலக சாதனை படைத்துள்ளது. பட்டியல் மிக நீளமானது. ஆனால் காங்கிரஸ் கட்சி சில மெகா ஊழல்களைத் தான் பட்டியலிட்டுள்ளது. 50 சதவீத கமிஷன் ராஜ்ஜியம் மாநிலத்தை ‘ஊழல் மாநிலமாக’ மாற்றியுள்ளது. 2018 மற்றும் 2020 க்கு இடையில் எனது ஆட்சி தான் நடந்தது. நான் 2018 மாதிரி இல்லை.

இப்போது நான் 2023 மாடல். 2019 மக்களவை தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகளின் காரணமாக இரண்டரை மாதங்கள் வீணாகிவிட்டது. இருப்பினும் ஊழல் முறைகேடுகளை விசாரிப்பதை விட, மத்திய பிரதேசத்தை முதலீட்டாளர்களின் மையமாக மாற்றுவதில் கவனம் செலுத்தினேன். ஆனால் மபி பா.ஜ ஆட்சியில் பிரபல வியாபம் ஊழல் (ரூ. 2,000 கோடி), சட்டவிரோத சுரங்கம் (ரூ. 50,000 கோடி), இடெண்டர் ஊழல் (ரூ. 3,000 கோடி), ஆர்.டி.ஓ ஊழல் (ரூ. 25,000 கோடி), மதுபான ஊழல் (ரூ. 86,000 கோடி), மகாகல் லோக் (ரூ. 100 கோடி) மின்சார ஊழல் (ரூ. 94,000 கோடி) உள்பட 254 ஊழல்கள் மூலம் ரூ.2.70 லட்சம் கோடி மோசடி நடந்துள்ளது. எதில் எடுத்தாலும் 50 சதவீத கமிஷன் பெற்ற அரசு இது.

இவ்வாறு அவர் கூறினார்.



நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நீட் தேர்வை எதிர்த்து இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி சார்பில் நீட் தேர்வை எதிர்த்து நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கே.பொன்னுசாமி, கழக தீர்மான குழு துணைத் தலைவர் பார். இளங்கோவன், திராவிடம் மாடல் பாசறை பேச்சாளர் டான் அசோக், மாநில நிர்வாகிகள் சி.ஆனந்தகுமார், ப.ராணி அ.ரியா, மற்றும் மாவட்ட இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

<u>நாம் ஒன்றிணைந்து இந்தியாவின் ஒற்றுமை உணர்வைத் தழுவிக் கொள்வோம்!</u>

# மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி! நமது நெஞ்சங்கள் பெருமிதத்தால் பொங்குகின்றன!

## சமூக வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!



**சென்னை, ஆக. 21-**

**மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி பெற்று வருவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி தொடங்குவது கண்டு, நமது நெஞ்சங்கள் பெருமிதத்தால் பொங்குகின்றன” என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்த அந்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கடினமான சூழலுக்கு இடையே மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் அதனால் துவளாமல் மீண்டுள்ளது மிகவும் நெகிழ்ச்சியடைய வைக்கிறது. அவர்கள் தமிழ்நாட்டில் தங்கள் பயிற்சியைத் தொடங்குவதைக் கண்டு, நமது நெஞ்சங்கள் பெருமிதத்தால் பொங்குகின்றன. மணிப்பூரில் இருந்து தமிழ்நாட்டில் பயிற்சி பெறவந்துள்ள 15 வீரர்கள் மற்றும் 2 பயிற்சியாளர்கள் இப்போது எங்கள் விளையாட்டுக் குடும்பத்தின் ஒரு பகுதியாகி உள்ளனர்.

இது எல்லைகளுக்கு அப்பால் பிணைப்புகளை வலுப்படுத்துகிறது. நாம் ஒன்றிணைந்து, இந்தியாவின் ஒற்றுமை உணர்வைத் தழுவிக் கொள்வோம்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.


